

மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், எஸ்.சௌந்தர்ராஜன் (எ) ராஜா– தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர்அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு – மாபெரும் புகழரங்கம் – வழக்கறிஞர் அ.அருள்மொழி, முனைவர்.பர்வீன் சுல்தானா, முனைவர்.சு.சங்கீதா ஆகியோர் புகழுரைத்தனர். உடன் மேயர் பிரியா ராஜன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள்,கழக நிர்வாகிகள், உள்ளனர்.

### பெஞ்சல் புயல் சேதத்தை சமாளிக்க – ஒன்றிய அரசு

# தாராளமாக நிதி ஒதுக்க வேண்டுமென்பதே அனைவரின் கோரிக்கையாகும்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, 17-

பெஞ்சல் புயல் சேதத்தை சமாளிக்க - ஒன்றிய அரசு தாராளமாக நிதி ஒதுக்க வேண்டுமென்பதே அனைவரின் கோரிக்கையாகும் என்று 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து 16.12.2024 தேதிய 'தினத்தந்தி' தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

இயற்கை பேரிடர்கள் ஏற்படும்போது அதை சமாளிக்க மாநில அரசுகளுக்கு அதிக நிதி தேவைப்படுகிறது. இதுபோன்ற பேரிடர்கள் எதிர்பாராத நேரத்தில் நடப்பதால், இதற்கான கூடுதல் நிதியை பட்ஜெட்டிலேயே கணக்கிட்டு ஒதுக்க முடியாது. எனவே, இதுபோன்ற அசாதாரண சூழ்நிலையை சமாளிக்க நிதிக்குழு பரிந்துரைகளின்படி, மாநில அரசுகள் இயற்கை பேரிடர் நிவாரண நிதியையும், மத்திய அரசாங்கம் மத்திய பேரிடர் நிவாரண நிதியையும் முன்கூட்டியே தயார் நிலையில் வைக்கின்றன.

மாநில நிதிக்காக மத்திய அரசாங்கத்தின் பங்கு 75 சதவீதமும், மாநில அரசுகளின் பங்கு 25 சதவீதமும் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் பேரிடர் நிவாரண நிதிக்காக, மத்திய அரசாங்கம் தனது பங்களிப்பு தொகையை மாநிலங்களுக்கு தவணைகளில் நிதி வழங்கும். இதற்காக கடந்த 2021-22ம் ஆண்டில் மத்திய அரசாங்கம் ரூ.16 கோடியும், 2022-2023ல் ரூ.856 கோடியும், 2023-2024ம் ஆண்டில் ரூ.900 கோடியும் ஒதுக்கியிருந்தது. இது சட்டப்படி ஆண்டுதோறும் கட்டாயமாக மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய தொகையாகும். இந்த தொகையை வைத்துத்தான் மாநிலங்களில் ஆங்காங்கு ஏற்படும் சிறிய வெள்ள பாதிப்புகள், வரட்சி, புயல் மற்றும் தி விபத்துகள் உள்ளிட்ட இயற்கை பேரிடர்களை சமாளிக்க முடியும்.

அதற்கு மேல் பெரிய அளவில் நடக்கும் இயற்கை பேரிடர் பாதிப்புகளை சமாளிக்கவும், அதற்கான நிவாரண பணிகள், சீரமைப்பு பணிகள், மறுவாழ்வு பணிகளை மேற்கொள்ளவும் மத்திய அரசாங்கத்திடம் இருந்து சிறப்பு நிதியை மாநில அரசுகள் கோரும். மத்திய அரசாங்கமும் நிபுணர் குழுவை ஆய்வுக்கு அனுப்பி சேத மதிப்புக்கு ஏற்ப தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து நிதியை ஒதுக்கும். இந்த நிலையில், கடந்த மாதம் இறுதியில் தொடங்கி இம்மாதம் தொடக்கம் வரை தமிழ்நாட்டிலுள்ள 14 மாவட்டங்களை உலுக்கிய பெஞ்ஜல் புயலால் ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்புகளை சமாளிக்க தமிழக முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் ரூ.6, 675 கோடியை விடுவிக்க கோரியிருந்தார்.



தலையங்கம்
தினத்தந்தி
16.12.2024 (திங்கட்கிழமை)
இது பெஞ்ஜல் புயலுக்கு அல்ல..!

இந்த கால கட்டத்தில், மத்திய அரசாங்கம் ரூ.91.80 கோடியை விடுவித்து இருந்ததாக செய்தி வந்தது. உடனே முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கேட்டவுடன் பெஞ்ஜல் புயலுக்காக மத்திய அரசாங்கம் இப்படி புயல் வேகத்தில் சிறப்பு நிதி ஒதுக்கியுள்ளது என்று அரசியல் கட்சிகள் சார்பில் அறிக்கைகள் வெளிவந்தன. ஆனால், இந்த ரூ.914.80 கோடியும் பெஞ்ஜல் புயலுக்காக ஒதுக்கப்படவில்லை.

மாநில பேரிடர் நிவாரண நிதிக்காக, அதாவது இந்த ஆண்டு தொடக்கத்தில் தமிழகத்துக்கு ஒதுக்க வேண்டிய மத்திய அரசின் பங்கைத்தான் ஒதுக்கியிருக்கிறார்களே தவிர, பெஞ்ஜல் புயல் பாதிப்புக்கென முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோரிய ரூ.6,675 கோடி தொகைக்கென முதல் கட்ட நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

பொதுவாக, இதுபோன்ற பேரிடர்களுக்காக தமிழக அரசு அள்ளிக்கொடுக்க கேட்கும் நேரத்தில் எல்லாம் மத்திய அரசாங்கம் கிள்ளித்தான் கொடுக்கிறது. கடந்த ஆண்டு ஏற்பட்ட மிக்ஜம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் பெய்த அதிகனமழையினால் ஏற்பட்ட பேரிடர்களுக்காக ரூ.37,906 கோடி கேட்ட நேரத்தில், மத்திய அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட சிறப்பு நிதி ரூ.276 கோடி மட்டுமே. அதுபோல இல்லாமல், இந்த பெஞ்ஜல் புயல் சேதத்தை சமாளிக்க மத்திய அரசாங்கம் தாராளமாக நிதி ஒதுக்கவேண்டும் என்பது தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் மக்களின் கோரிக்கையாக இருக்கிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### 60 ஆயிரம் கார்டுகள் என்பது தவறான தகவல்! யாருக்கும் பாதிப்பில்லாத வகையில்

# கன்னியாகுமரி மாவட்டத்தில் குடும்ப அட்டைகள் மீதான பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை!

## சட்டப் பேரவையில் அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!

சென்னை, டிச.17-

சட்டப்பேரவையில் கிள்ளியூர் தொகுதி உறுப்பினர் செ.ராஜேஷ்குமார் பேசும்போது குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் அர.சக்கரபாணி, யாருக்கும் பாதிப்பில்லாத வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் குடும்ப அட்டைகள் மீதான பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.



சட்டப் பேரவையில் கிள்ளியூர் தொகுதி உறுப்பினர் செ.ராஜேஷ் குமார் பேசும்போது, தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒரு முக்கிய பிரச்சினை குறித்து உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சரிடம் தெரிவிக்க விரும்புகி றேன். அதாவது, Antyodaya Anna Yojna (AAY) அந்த்யோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டைகள், இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் 60,000க்கும் மேற்பட்ட கார்டுகள் இருக்கின்றன. ஆனால், இன்றைக்கு, திடீரென்று அந்த்யோதயா அன்ன யோஜனா கார்டுகளை, NonPriority Household (NPHH), முன்னுரிமை இல்லாத கார்டுகளாக கருதி, அதை இரத்து செய்திருக்கிறார்கள். அதற்கு முக்கியமான காரணமாக, அவர்கள் என்ன சொல்கின்றனர் என்றால், மகளிர் உரிமைத் தொகைக்காக ஆதார் கார்டுகளையும், ரேஷன் கார்டுகளையும் இணைக்கும்போது, அதில் full details வந்துவிடுகிறது. அப்படி அதில் details வரும்போது, சில பேர், கல்விக்காக வங்கியை நாடி இருப்பார்கள். அதற்காக, வருமான வரிincome tax செலுத்துவதற்காக ஒரு preliminary நடவடிக்கை எடுத்திருப்பார்கள். அதேபோன்று, மாற்றுத் திறனாளிகளுக்கு நமது தமிழக அரசுதான் ரூ.1,500/, ரூ.2,000/ வரைக்கும் உதவித் தொகை வழங்குகிறது. ஆனால், அந்த 1,500 ரூபாய், 2,000 ரூபாய் உதவித் தொகை பெறுகின்ற மாற்றுத் திறனாளிகள் வரைக்கும் இன்றைக்கு அந்த AAYஅந்த்யோதயா அன்ன யோஜனா கார்டுகளை இரத்து செய்திருக்கிறார்கள் இல்லை நீங்கள் departmentல் கேளுங்கள் முழுமையாக departmentல் கேட்டால் அவர்கள் என்ன சொல்கின்றனர் என்றால், ஏற்கெனவே இதுமாதிரியான பிரச்சினைகள் இருக்கின்றன.

ஆகையால், தயவு செய்து, உண்மையாக இருக்கின்றவர்களை ஆய்வு செய்து, அந்த NPHH கார்டுகளை அந்த்யோதயா அன்ன யோஜனா கார்டுகளாக நீங்கள் மறு பரிசீலனை செய்து, சேர்க்குமாறு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் அர.சக்கரபாணி, கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 21,099 முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் NPHH முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள், PHH குடும்ப அட்டைகளாக மாற்றப்பட்டுள்ளன. தற்போது முன்னுரிமை குடும்ப அட்டைகளாக மாற்றக்கோரும் 713 மனுக்கள் பரிசீலனையில் உள்ளன. AAY குடும்ப அட்டைகளை முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட நேர்வுகளில், கள ஆய்வு செய்து, அந்த ஆய்வில் கிடைக்கும் விவரங்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். 60,000 கார்டுகள் என்பது தவறான தகவல். எனவே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை—இன்றைக்கு அங்கிருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வழங்கல் அலுவலர் உள்ளிட்ட மாவட்ட அதிகாரிகளிடத்தில் சொல்லி, யாருக்கும் பாதிப்பில்லாத வகையில் முதலமைச்சரின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், எஸ்.சௌந்தர்ராஜன் (எ) ராஜா தலைமையில்

# மாவட்ட இளைஞர் அணி சார்பில் மனித நேய உதய நாள் புகழரங்கம்!

## வழக்கறிஞர் அ.அருள்மொழி – முனைவர்.பர்வீன் சுல்தானா – முனைவர். சு.சங்கீதா சிறப்புரை!

சென்னை, டிச. 17 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம் 25,திராவிடம் என்பது புரட்சியின் உதயம்! தமிழினம் காக்கவே பிறந்தது கழகம்! எனும் தலைப்பில்மாபெரும் புகழரங்கம் 16.12.2024 திங்கட்கிழமை அன்றுமாலை 6.00 மணியளவில், சென்னை, கோல்டன் பிளாட் எதிரில், சின்னசாமி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில்அம்பத்தூர் தெற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.சௌந்தர்ராஜன் (எ) ராஜாதலைமை வகித்தார்.

சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை வகித்து பேசினர்.

ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், உமாசந்தானம் எம்.சி, டி. லோகேஷ், எல்.பி.எப். மோகன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, ஜெ.பாலமுருகன், கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம் முன்னிலை வகிக்கின்றனர். பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர் நானா, என்.பி.எம்.வசந்த், இரவை பிரபு, தி.ஜெயபால், எஸ்.கே.கோவிந்தன், எம். மணிகண்டன், எ.வ.சாந்தகுமார், டி.புருஷோத்தமன்,எஸ். சந்திரசேகர் வரவேற்றனர்.

இப்புகழரங்கத்தில் வழக்கறிஞர் அ.அருள்மொழி, முனைவர்.பர்வீன் சுல்தானா, முனைவர்.சு.சங்கீதா ஆகியோர் புகழுரைத்தனர்.

மேலும், இப்புகழரங்கத்தில், சென்னை மாநகர மேயர் ஆர். பிரியாராஜன்,பி.முனியாண்டி, அம்பத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: எம்.இ.சேகர் எம்.சி, உஷாநாகராஜ் எம்.சி, கே.பொற்கொடி எம்.சி, எம்.கமல் எம்.சி. அம்பத்தூர் தெற்கு வடக்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: இரா.டீக்கா, த.பிரகாஷ்குமார், சி.சீனிவாசன், வீ.ரவீந்திரன், பு.வீரா, வெ.ராதாகிருஷ்ணன், மு. இரகு, த.கண்ணபிரான், மு. சண்முகம், ஆ.சுந்தர்ராஜ், சீ.லோகநாதன், மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் ஆகியோர் சிறப்பித்தனர். வட்டகழக செயலாளர்கள்: எம்.இ.சேகர், இரா.டீக்காநன்றி கூறினார்கள்.


சென்னைத் தெற்கில் ஒரு மாதம் முழுவதும்

“உதயநிதியின் உதயநாள்” விழா

364 சொற்பொழிவாளர்கள் பங்கேற்கும்
182 பிறந்தநாள் கூட்டங்களின் “இன்றைய நிகழ்ச்சிகள்”



17.12.2024 - செவ்வாய்க்கிழமை

| வ.எண் | சொற்பொழிவாளர்கள் | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 1. | மருத்துவர். யாழினி<br>நா.காருண்யா | 139 வட்டம் – மாணிக்கம் தெரு, ஜாபர்கான் பேட்டை, சைதாப்பேட்டை மேற்கு பகுதி. | வீ.மதிவாணன்<br>மாவட்ட பிரதிநிதி |
| 2. | ஜஸ்டின் வில்பர்ட்<br>ச.பூங்கொடி | 128 அ வட்டம் – சாதிக் பாட்சா நகர், கலைஞர் நகர் வடக்கு பகுதி, விருகம்பாக்கம். | அ.நசீர் சிறுபான்மையினர் நலப்பிரிவு மா.து.அமைப்பாளர் |
| 3. | ஆவடி கா.மு.ஜான்<br>ஏ.ஆட்லின் | 180 அ வட்டம் – தெற்கு மாடவீதி, திருவான்மியூர், வேளச்சேரி கிழக்கு பகுதி. | இரா.நடராஜ் தொழிலாளர் அணி பகுதி து.அமைப்பாளர் |
| 4. | கோவை இக்பால்<br>அ.தமிழரசி | 188 வட்டம் – மடிப்பாக்கம், கக்கன் தெரு, சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி. | ஜி.சுரேஷ் வட்டச் செயலாளர் |
| 5. | உடன்குடி தனபால்<br>ச.தஸ்மிமா நஸ்ரின் | 146 வட்டம் – ஸ்ரீலட்சுமி நகர், நாடார் சங்கம் அருகில், மதுரவாயல் வடக்கு பகுதி. | எம்.ரூபன் வட்டச் செயலாளர் |
| 6. | ஆண்டவர் செல்வம்<br>செ.பெ.காவியா | மேட்டுக்குப்பம் – அண்ணா தெருஇ வானகரம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம். | ந.நவீன்குமார்<br>விளையாட்டு மே.அணி மா.து.அ |

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிப்போர் :

மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அளவிலான அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். எனவே கழகத் தோழர்கள் பெருந்திரளாக இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

அன்புடன் : அமைச்சர் மா.சுப்பிரமணியன் B.A., LL.B.,
மாவட்ட கழக செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.